# அறிவித்தல்

இலங்கை நிருவாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவை ஆகியவற்றிலுள்ள வெற்றிங்களுக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தழுவல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றின் கீழ் உள்ள திணைக்களங்களில் காணப்படுகின்ற பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை நிருவாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை பொறியியல் சேவை ஆகியவற்றிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடங்களின் எண்ணிக்கை தரம்

| சேவை | தரம் **I** | தரம் **II/III** |
|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை | 18 | 34 |
| இலங்கை கணக்காளர் சேவை | 08 | 16 |
| இலங்கை திட்டமிடல் சேவை | 05 | 15 |
| இலங்கை பொறியியல் சேவை | 01 | - |

நிதி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றின் கீழ் உள்ள திணைக்களங்களில் வெற்றிடமாக காணப்படுகின்ற பதவிகளில் இணைந்து சேவையாற்றுவதற்கு விரும்பும் உத்தியோகத்தர்கள், பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உத்தியோகத்தரை தற்போதைய சேவை நிலையத்திலிருந்து பதிலாள் ஒருவரை கொண்டதாக/ இன்றி விடுவிப்பதற்கு விருப்பத்தை தெரிவித்து அமைச்சின்/ திணைக்களத்தின் தலைவரின் பரிந்துரைகளை உள்ளடக்கியதாக 2021.09.15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் Addlsec@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

இதன்போது நாட்டில் காணப்படுகின்ற சூழ்நிலைக்கு மத்தியில் அமைச்சின்/ திணைக்களத்தின் தலைவரின் பரிந்துரையை விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மின்னஞ்சல் முகவரிக்கு தனியாக மின்னஞ்சல் மூலம் அனுப்புவதும் போதுமானதாகும்.